செந்தமிழ்

தொகுதி 90 மே-96 பகுதி 5

திங்கள் இதழ்

ஆசிரியர் **மா. தனுக்கோடிபாண்டியன்** பி.ஏ.பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

பொறுப்பாசிரியர் : பேரறிஞர் **ந. பாலுசாமி,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் சி. கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் அ.அ. மணவாளன்
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் க.ப. அறவாணன்
மத்திய பல்கலைக் கழகம், புதுவை

பேரறிஞர் சூ. இன்னாசி
கிறித்துவத் தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

பெருபுலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி

பேரறிஞர் சி.மொ. இராசேந்திரன்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் நா. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் நா.ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழம், மதுரை

பேரறிஞர் எஸ்.எம். கமால்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை

பொருளடக்கம்

		பக்கம்
1.	**பொன். பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச் சிந்து**	174
2.	**குச்சரக்குடிகை** - கே.ஜி. சேஷையர்	177
3.	**அபிராமி அந்தாதி** - பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி	181
4.	**குழந்தைப் பலி** - பேரறிஞர் அ. மா. பரிமணம்	185
5.	**இப்படி ஓர் தமிழறிஞர்** - பேரறிஞர் தி. நா. பிரணதார்த்திஹரன்	192
6.	**திருப்புகழ் யாப்பு** - பேரறிஞர் இ. அங்கயற்கண்ணி	196
7.	**தமிழகத் தொல்லியல் கழகம் - கல்வெட்டு பயிற்சி முகாம் (மே - சூன்)** - பேரறிஞர் க. முத்தையா	207
8.	**கதிர் தரும் பதில்**	211

பொன். பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச்சிந்து

('96 மார்ச் இதழ் தொடர்ச்சி)

3. சிவஞானபுரத்தின் வளம்

தலவரலாறு

நானிலம்ப ராவுபெரு மானிளஞ்சேய் மேவுசிவ
ஞானபுரத் தின்வளங்கள் யாவுமே - சொல்லத்
தானடங்கு மோவனந்தன் நாவுமே.

வானளாவு சோலையெங்கும் கானமேவு கோகிலங்கள்
வண்டினிசை யோடிசைந்து பாடுமே - அது
கண்டுமஞ்ஞை தோகைவிரித் தாடுமே

கந்தமேவுங் கோதைமாதர் வந்துதோயும் பொய்கை சேரும்
கஞ்சமலர் நாவிபரி மளிக்குமே அதில்
துஞ்சுமன்னம் பேடையோடுங் களிக்குமே

நந்துகள்த வழ்ந்துவாரி சந்தினிற்சொ ரிந்தமுத்தை
நாரைகள்க ருவென்றடை காக்குமே செழுந்
தேரைகள் குதித்தகலப் போக்குமே

பள்ளநீர்பாய் மேதிகன்றை யுள்ளியேகும் போதுசோரும்
பாலின் வெள்ளம் பண்ணைதோறுந் தேங்குமே - செழுஞ்

சாலிகன்னல் போலவளர்ந் தோங்குமே.

உள்ளியேநல் கார்தனத்தைக் கொள்ளைகொண்டிவார்கள் போல்
ஓடவேதேன் கூடுகீறிச் சிந்தியே - தேனை
நாடுவார்தங் கட்குநல்கும் மந்தியே
வாவுமஞ்ஞை யூர்தியார்பொற் கோவில்முன்சேர் கோபுரங்கள்
வானவர்கள் வந்துநாளும் பேணியே - செல்லத்
தானயன்ச மைத்தளித்த ஏணியே.

மேவுமந்தி தாவிவிண்ணோர் காலில் மன்னும் பூவினைச்செவ்
வேளுபயத் தாளில்விழத் தூற்றுமே - கடுங்
கோளுறுஞ்சென் மத்தொட ரைமாற்றுமே.

தலைவி, தனக்குத் தலைவனொடு நிகழ்ந்தமை தோழிக்குக் கூறியது

திங்களோடுங் கங்கைசூடும் மங்கைகூடும் பங்கர்நாடும்
தேனொழுகு தண்கடம்பு பூண்டவன் - சிவ
ஞானபுரம் மேவியென்னை யாண்டவன் - அன்று
தேடியென்றனை நாடிவந்துற வாடியன்பொடு கூடியங்கச
தெய்வதம்போ லேவந்து கொஞ்சியே - போன
வைபவந்தா னென்னசொல்வேன் வஞ்சியே.

துங்கநால்வே தங்களோதும் பங்கயா சனங்கொள்தேவன்
தோன்றிடாதீ தென்றுதாழ்ந்து கூறவே மறைக்
கேன்றபொருள் யாவுமையந் தீரவே சொன்ன
சூதில்ாதகி ராதர்மாமகள் மீதிலேவளர் காதலார்புரி
சுரதந யக்கலவி விந்தையே - அன
வரதம்நி னைக்குமென்றன் சிந்தையே.

பாவையேபூ வாவியோரம் காவிலேநான் மேவுயுயிர்ப்
பாங்கிமார்க ளோடுவிளை யாடையில் - அவ்வர்
நீங்கவேநின் றேன்தனித்தோர் மேடையில் - வள்ளி
பாகனாத வாகவந்ததி மோகமோடெதி ராகநின்றடி
பைந்தொடி நீ யாவளென்று பேணியே - கேட்கச்
சிந்தையுந்தி கைத்துநின்றேன் நாணியே.

தேவமாதோ பூவில்வாழும் பாவையோ பூவையோ என்
சிந்தைகவர்ந்த திங்குநின்றதே தென்றான் - பெண்ணே

உன்றனூரும் பேருமென்ன வோதென்றான் - பசுந்
தேனளாவிய காவுசூழ்சிவ ஞானமாபுர மேவிவாழ்வுறு
சீதரன்ம கிழ்மருகன் றானுமே - அதற்
கேதுமுரை யாதுநின்றேன் நானுமே

நாகநாய கன்பயந்த தோகைமோக னன்புகொண்டு
ஞாயமோபே சாதிருத்த லாகுமோ - பெண்ணே
வாயுனின்றும் முத்துதிர்ந்து போகுமோ - என்றே
நவமிகுந்துரை பலவிளம்பிட நனிதொடரந்தென துளமுறைந்திடு
நாணமுமெ னைப்பிரிந்தொ ழிந்ததே - சிறு
வாணகையெ னக்குமெல்ல வந்ததே.

மோகனவி வேகன்மயில் வாகனன்என் மாகனத்து
முத்திமிட் டணைத்த தொரு சாரமே - காமப்
பித்தெனைப்பி டித்ததந்த நேரமே - இரு
முலைகளிற்சிறு பிறையெனத்தகு பலநகக்குறி களைய மூத்தியென்
முகத்துமு கத்தைவைத்துப் புல்லினான் - இன்ப
சுகத்தையெ னக்குமெத்த நல்கினான்

கோலமேவும் நீலமேகம் போலவாரும் ஏலநாறும்
கூந்தலில்ந றுமலரைச் சூட்டினான் - அடி
யேந்திழையென் மீதில்மையல் காட்டினான் - கனி
கோவைவாய்வரு மதுசுவைத்தரை நீவிசேர் கலைதனை நெகிழ்த்தியே
கொஞ்சமோஅ வன்செய்தொழி லானதே - யென்றன்
நெஞ்சமும்ப ரவசமாய்ப் போனதே.

சூலமேந்து நீலகண்டன் பாலனாஞ்செவ் வேலனங்கு
தூயமார னைப்புகழந்து கூறியே - எனை
நேயமோட ணைத்துமயல் மீறியே - அடி
தோகையேயுன தாகமேவிடு போகவிடு போகமே கனயோகமாமெனச்
சோர்விலாது செய்தான் பல லீலையே - யெவர்
நேருவார வன்போல்மத நூலையே.

... தொடரும்....

குச்சரக்குடிகை

கே.ஜி. சேஷையர்

தமிழின் மேம்படு தகைத்தமிழ் பூணு மணிமே கலைய. மணிமே கலையுஞ் சிலம்பாஞ் சீர்மிகு சிலப்பதி காரமும் இலங்கை மன்னன் கஜபாகுவின் காலமாகிய கி.பி.2ம் நூற்றாண்டிற்குரியன என்று கூறுவோரில் நானுமொருவன். ஆனால், அவற்றின் காலம் மிகவும் பிந்திய தென்று வாதிப்பாருமுளர். அவ்வாறு துணிதற்கு எடுத்துரைக்கும் பல காரணங்களுளொன்று மணிமேகலையில் குர்ச்சரரைக் கூறியிருத்தலென்று சில கலைஞர் எழுதியுள்ளார். மணிமேகலை 18ம் பாட்டாகிய உதயகுமரன் அம்பலம்புக்க காதையில் ஈரிடத்து "குச்சிரக்குடிகை" என்று வந்திருத்தலை நினைத்தே இவ்வாறு கூறியுள்ளார். இத்தொடர் மொழிக்கு மகாமகோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள் தமதருமையான பதிப்பின் 162ம் பக்கத்தில் பின்வருமாறு உரைதீட்டி யிருக்கிறார்கள். "குச்சிரக்குடிகை (=கூர்ச்சரக்குடிகா) கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறியகோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பெயர் பெற்ற தென்பர்". இவ்வுரையால், மேற்கூறிய பதம் குர்ஜர ராஷ்ட்ர அல்லது குஜராத் என்ற தேச நிவாசிகளாகிய குர்ஜரரைக் குறிக்குமென்றும், அச்சாதியார் சிற்பத்திற் றேர்ச்சியடைந்தவ ரென்றும், அவர் ஓர் விசேடவிதப்பணி தாபிதஞ் செய்தாரென்றும், அம்மாதிரிப்பணி தென்னாட்டிலும் பரவிற்றென்றும் காணக்கிடக்கின்றன. குர்ஜரரைப் பற்றிய சிற்றறிவுக்குத் தோன்றும் பொருள் கற்பாறையிற் சமைத்த சிற்றில் அல்லது கோயில், என்று விநயத்தோடுகூற விரும்புகின்றேன்.

பொருள் முன்னதாயின். சிலவினாக்கள் முறையே எழுகின்றன. குர்ஜரர் பிறநாட்டாரில் எவ்வகுப்பினர்? அவர் இந்தியாவிற் குடியேறிய காலம் யாது? அவர் சிற்பத்தொழிலில் பேரறிஞ

ரென்பதற்குச் சான்றெங்குளது, அவர் நூதன முறையிற் பணியமைத்தன ரென்பதற்கடித்தானமென்னை? அவர் எவ்விதத் திலாவது தக்கணதேசத்தில் வியாபகம் பெற்றதாகச் சரித்திரமுளதோ? கி.பி.5 அல்லது 6ம் நூற்றாண்டிற்கு முன்பு குர்ஜரர் சரித்திரத்திற் கூறப்பெற்றிலரென்ற துணிபு அங்கீகரிக்கத்தக்கதா? சகனர் (Sakas) அல்லது ஹூணர் (Hun) ஜாதியார் படையெழுச்சிக் காலங்களில் குர்ஜரர் இந்தியாவிற் புகுந்தனரென்று ஒருவரெழுதுகிறார் (Thompson's History of India p.86) சகனர் படையெழுச்சி கி.மு.2ம் நூற்றாண்டு. அச்சாதியார் காஷ்மீர் வழியாகப் பஞ்சாபிலும், சகஸ்தானவழியாக ஸிண்டியிலும் பிரவேசித்தனர். கி.மு. முதல் நூற்றாண்டில் வட இந்தியாவிற் சில விடங்களில் அவர்கள் ஆட்சி செலுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது. ஆதிகாலத்தில் குர்ஜரம் மௌரியராளுகைக்குட்பட்டிருந்தது. மௌரியராட்சி சிதைவுற்ற காலத்து, கி.பி. ஒன்று முதல் நான்காம் நூற்றாண்டிறுதி வரையில் குர்ஜரம் சகனராளுகைக்குட்பட்டிருந்தது. பின்னர் சகக்ஷாத்ரபக் (Saka Satraps) ஆட்சியை விக்ரமாதித்யன் என்ற விசேடப் பெயர் பூண்ட சந்திரகுப்தன் அழித்தனன். கி.பி. 413-ல் சந்திரகுப்தன் காலஞ்செல்ல, அதன்பின்னர் குப்தராட்சியும் வலிகுன்றியதால், 5ம் நூற்றாண்டிறுதியில் ஹூணர் படையெடுத்து பல விதமாக நாட்டை யழித்தனர். கடைசியில் 528 அல்லது 530 ம் வருடத்தில் காரூர்க் களத்தில் நேர்ந்த போரில் நரசிங்ககுப்தனும் யசோதர்மனு மொன்றுபட்டு ஹூணாதிபன் மிகிரகுலனைவென்று, அவனைக் காஷ்மீருக்கோட்டினார். இந்நிகழ்ச்சிக்கு இருபதல்லது முப்பது வருடங்கட்குமுன், பட்டார்க என்றவோர் குர்ஜரன் வலபிநகரை வேந்திருக்கையாகக் கொண்டு குர்ஜரத்திலிறை மாட்சிபுரியத் தொடங்கினன். இவன் தாபித்த வலபிராச்சியம் கி.பி.770ல் மாண்டதென்பர். மேற்கூறிய வரலாற்றால் சகனர் குர்ஜரத்திற்கு கிருஷ்தபத்திற்கு முற்பட்ட காலத்தில் வந்தனரென்று புலப்படும். குர்ஜார் சகனரன்றென்று வரலாறு கி.பி.5 அல்லது 6ம் நூற்றாண்டிற்குமுன் சரித்திரங்களிற் காணவில்லை என்றும், அதனால் குர்ஜரர் 5ம் நூற்றாண்டிற்குச் சமீபத்த காலத்தில் புறநாட்டினின்று இந்நாட்டிற் குடியேறி யிருக்க வேண்டுமென்றும், குர்ஜரர் தேர்ந்த கலையை வியந்து கூறும் மணிமேகலையும் அதேகாலத்தாக்கப் பெற்ற சிலப்பதிகாரமும் கி.பி.7 அல்லது 8ம் நூற்றாண்டிற் றோன்றிய நூல்களாகவேண்டுமென்றுங் கவிஞர் சிலர் கூறுவர்.

இங்குக் "குச்சரக்குடிகை" யென்ற பதம் வழங்கியிருக்குஞ் சந்தர்ப்பம் சற்று கவனிக்கத்தக்கது. மணிமேகலை மீது வேட்கைகொண்ட உதயகுமரன் காமபரவசனாய் மலர்வனம் புகுந்து

மணிமேகலையை அகப்படுத்திக் கொள்ள முயன்றும் அவன் தீநோக்கம் நயப்படாமற்போக மணிமேகலையை அவள் மூதாய் சித்திராபதியால் இனிச்சேர்தல் கூடுமென்று நினைத்து அச்சோலையினின்றுமவன் போயினன். பிறகு மணிமேகலா தெய்வத்தின் திருவருளால் வேற்றுவடிவைக் கொடுப்பதும் ஆகாயவழியே சஞ்சரிக்கச் செய்வதுமாகிய மந்திரங்களிரண்டை அப்பெண்மணி கற்றுணர்ந்து, புத்ததேவரருளிச்செய்த நல்லறவழியை நணுகி, அமுத சுரபியைப்பெற்று, அறவணவடிகளைத் தொழுது, பிக்குணியாய்த் தாபதங்கோலங்கொண்டு தன்னூராகிய காவிரிப்பூம் பட்டினத்திற்கு மீண்டுவந்து, அங்குள்ள ஊரம்பலமாகிய, உலக்வறவியிற் சென்றிருந்தாள். இதைக்கேட்ட சித்திராபதி உதயகுமரனை நாடி மணிமேகலையிருக்குமிடத்தை அவனுக்குக் குறிப்பிக்க, அவன் விரைவொடு உலகவறவியை யடைந்து, அங்கு உணவளித்துக் கொண்டிருந்த மணிமேகலையினருகிற் சென்று, "நீ இக்கோலங்கொண்டதென்னை" என்று கடாவ, 'வாட்டிறற் குரிசிலை மடக்கொடி நீங்கி, குச்சரக்குடிகை தன்னகம்' புகுந்து, முன் மணிமேகலா தெய்வமுபதேசித்தருளிய மந்திரத்தையோதிக் காயசண்டிகைவடிவமுற்று வெளியே தோன்றினள். மணிமேகலை வேற்றுவடிவு கொண்டாளென்பதை யறியாத உதயகுமரன் அவளைத் தேடிக் குச்சரக்குடிகைக்ககத்துச் சென்றான். இதுவே கதை. இங்குச் சாத்தனார் கூறுங் "குச்சிரக்குடிகை"யின் பொருள்யாது? புலவர் சிகாமணியாகிய நற்றமிழ்க்குரவர் ம்கா மகோபாத்யாய சாமிநாதையரவர்கள் அப்பதத்தின் பொருள் "கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறியகோயில்" என்று விளக்கியிருக்கின்றார். என்றும் துணியக் காரணமொன்றுங் காணோம். ஹூணரென்று கருதற்கு இலட்சியமொன்றுமிலது. ஹூணர்வலி காரூர்க்களத்தில் முற்றும் முரிவுற்றபிறகு மாளவதேசத்தரசனான யசோதர்மன் குர்ஜரதத்தில் ஹூணவரசாட்சி யோங்கிவளரச் சம்மதித்தானென்று கூறுதல் சற்றும் பொருத்தமுடையதன்று. குர்ஜரர் சகஸ்தானவழியாக ஸிண்டிற் புகுந்த சகனரின்கிளை யேயாவர். ஆயினுமவர் சிற்பத்திற் பெயர் பெற்றவரென்றாவது, விசேட இரீதிப்பணி அவரேற்படுத்தின ரென்றாவது யாண்டும் நான் கண்டறியேன், அன்றியும், குர்ஜரரது படைத்தேர்ச்சியோகலைத் தேர்ச்சியோ தக்கணவிராச்சியங்கட்குக் கடந்தேகியதாகச் சரித்திரதிற் காணவில்லை.

"குச்சரக்குடிகை" என்றதற்கு 'கற்பாறையிற் சமைத்த சிற்றில் அல்லது கோயில்' பொருளென்றேன். அதெங்ஙனமெனின், குச்சரம் என்றது 'குந்தரம்' தகரத்துக்குச் சகரம் போலியாய் வருதல் இலக்கணநெறி. 'குக்தரம்' அல்லது 'குத்ரம்', கீ த து(குத்ர) என்ற வட

மொழிப்பதமேயாகும். குத்ர: என்ற கீர்வாணப்பதத்திற்குப் பொருள் கற்பாறை அல்லது மலையென்றாகும். 'குடிகை' என்றது 'குடிகா' என்ற சமஸ்கிருதபதம் 'குடிகா' என்றாலும் 'குடி' என்றாலும் சிற்றில் என்பது பொருள். அதனால் 'குச்சரக்குடிகை' என்றால் 'கற்பாறையிற் குடைந்த சிற்றில்' என்று பொருள்படும். இவ்வாறு பொருள் கொள்வது கதா சந்தர்ப்பத்திற்கும் பௌத்தசங்கவொழுக்கத்திற்குஞ் சாலவும் பொருந்துதல் எளிதிற்புலப்படும். 'குச்சிரக்குடிகை'க்குப் பொருளிங்ஙன கொண்டால் மணிமேகலையில் குர்ஜரரைக் குறித்துக் கூறுவதாய்ச் சொல்வது மித்தியாவாசகமாகவே முடியும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி.பி.2ம் நூற்றாண்டிற்குரியனவல்ல வென்று இவ்வசனத்தாலேற்படவும் நிமித்தமில்லை.

திருவனந்தபுரம்
1 11 1919

குறிப்பு :
இக்கட்டுரை 1919 இல் செந்தமிழ்த் தொகுதி 17, பகுதி 11 இல் வெளிவந்தது.

அபிராமி அந்தாதி
ABIRAMI ANTHATHI

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி

உமையும் உமையொரு பாகனும் ஏகவுருவில் வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனியெண்ணுதற்குச்
சமயங் களுமில்லை யீன்றெடுப்பா ளொரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே

Umadevi and Her spouse who shares her frame with her
Came in a single form and caused my servitude to them!
Hereafter, there is no creed to think of and no mother to conceive me!
Enough is my craze for the women of bamboo - like shoulders! (31)

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தி லல்றற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே!

Oh bejewelled mother abiding in the left half of the Lord!
I was amidst the sea of desires
And I was about to be trapped
By the noose in the hands of Death!
Thou crowned unsought the head of this humble soul
With Thy lotus-feet and made it Thy servant!
Can I praise Thy grace for me? (32)

இழைக்கும் வினைவழியே அடும்காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்

குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுதுன்னை யேஅன்னை யேயென்பன் ஓடிவந்தே!

Oh soft miened yamaladevi with Thy heaped up breasts smeared with sandal paste!
Thou cause melt in full, the siddha of the Lord!
When the merciless Death strikes panic and summons me,
Owing to the all powerful Karma, may Thou appear before me and say
"Fear not"!
I will rush to Thee only, my mother,
When I confront with grief! (33)

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே!

Abirami gracefully blesses her servitors
That seek refuge in her sacred feet
with heavenly life; then she abides
In the four faces of Lord Brahma,
The sacred chest of Lord Vishnu
Adorned with the basil flowers
Dripping with fresh nectar and the heavy Goustua gem,
The left half of Lord Shiva,
The lotus flower full of honey
And in the sun and moon with spread out rays! (34)

திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்திய வாயெண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப் பொருளே!

Oh supernal Lord
Sleeping on the mattress of Ananthan of cruel eyes
Amidst the wavy sea of milk!
How much tapas have we performed
To have our heads crowned with Thy pretty feet
That smell of the crescent that adorns the Lord's head!
Even the numberless Celestials
Are not blessed enough to enjoy such a boon! (35)

பொருளே பொருள்முடிக்கும்போக மேயரும் போகம் செய்யும்
மருளே மருளில் வரும்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளே துமின்றி ஒளிவெளி ஆகி இருக்குமுன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே!

Oh Ambika enthroned on the lotus!
Thou art wealth, the pleasure offered by it,
The delusion caused by that pleasure,
And also the clarity that dawns out of that delusion!
I do not realise the greatness of Thy grace
That glows in mine heart
As a flood of light unstained by the darkness of ignorance! (36)

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே!

Oh mother Abirami abiding the left half
Of the Lord who wears as his garment, the eight directions!
Thy sacred hands are adorned with the sugarcane bow and the flower darts!
Thy lotus-red sacred body is adorned with pearl-made garlands!
Thy forelap resembling the hood of the poisonous serpent is adorned with the waist-band of many gems and silk garment! (37)

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யுந்துணை யாயெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே!

Mother Abirami's breasts cause
Her tudi-like narrow waist grieve!
Her breasts, armed with her coral-like lips,
And Her sweet smile that appears
In Her pearl-white teeth
war with the Lord and melt His heart!
Oh men on earth, if you are desirous
Of attaining the lordship of Amaravathi,
Worship that mother with devotion! (38)

ஆளுகைக் குன்றன் அடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே!

Oh Abirami with glowing forehead!
Thou art abiding in the left half of the Lord
Who bent the Meru mount and shot arrows
To annihilate the trinity of castles of the Asuras
Thy lotus feet are there to enslave me!
Thy mercy is there to help me escape
The clutches of Death!
Should I fail to attain these,
The fault is mine not of Thee! (39)

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற் கண்ணியன் அல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே!

Abirami, my Lord's spouse is endowed with an eye on Her fore head!
All the Celestials crave to come to Her presence for worship!
She is the virgin who is beyond the reach of my ignorant heart!
The very thought of having the desire to worship Her
Is the fruit of the tapas which I performed in my past births! (40)

குழந்தைப் பலி?

பேரறிஞர் அ.மா. பரிமணம்

திருச்சி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்விதழான 'வரலாறு' (5) ஏட்டில் இடம்பெறும் பெட்டிச் செய்திகள் ஒன்றில், சங்க காலத் தமிழகத்தே 'குழந்தைப்பலி' கொடுக்கும் வழக்கம் இருந்ததா என்னும் ஐயமும், அவ்வையம் தோன்றியமைக்கான செய்திக்குறிப்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிற் கூறப்பட்ட செய்தி உண்மையாயின், அது பழந்தமிழ் மக்களின் பண்பாடு பற்றியதாக இருத்தலால், ஆழ்ந்த ஆய்விற்குரியதாகும். அப்பெட்டிச் செய்தியின் பகுதி வருமாறு:

> "...பலிக் கடனாக ஊனும் குருதியும் உயிரழித்துச் செலுத்தப்பட்டமைக்குப் பல சான்றுகள் தமிழிலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. ஆனால், குழந்தைப்பலி பற்றி இதுநாள் வரையில் கேள்வியுற்றதில்லை. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் நற்றிணைப் பாடலொன்றிற்கு (15) உரையெழுதுமிடத்துக் 'குற்றமற்ற கற்பினையுடைய மடவாள் ஒருத்தி தன் குழவியைப் பலி கொடுப்ப வாங்குதலும் அவள் அதனைக் கைவிட்டாற் போல' என்று பாடலில் வரும் குழந்தையிழப்பு பற்றிய வரிகளுக்கு விளக்கம் தந்துள்ளார். பொருளுரைப் பகுதியில் பாட வேறுபாடு கூறி, தாயிடமிருந்து குழந்தையைப் பேய் பறித்ததாகவும் கொள்ளலாம் என்கிறார். இவ்விளக்கங்களின் உண்மைத் தன்மை குறித்துத் தமிழ்ப் பேராசிரியர்களின் கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன"

பழந்தமிழ் பண்பாடு பற்றிய செய்திகளில் ஐயந் தோன்றுமிடத்தே அதன் உண்மையினைத் தக்கார் வாயிலாக அறிந்து வெளிப்படுத்துவதில் 'வரலாறு' இதழ் கொண்டுள்ள ஆர்வம் பாராட்டத்தக்கது. அவ்வுண்மை பற்றிச் சிந்திக்கத் தொடங்குமுன் நற்றிணை உரையாசிரியர், உரைகள் பற்றிய சிலவற்றை நினைவுகூர்வது அதற்குப் பெரும்பயன் அளிப்பதாக அமையும். தில்லைக் கோயிலின் திருவறை ஒன்றில் சிறையிருந்த திருமுறைகளை இராசராச மாமன்னன் வெளிப்படுத்தினான் என்பது போலத், திருமடங்களின் அறைகளிலும் பெரும்புலவர் தம் இல்லப் பரண்களிலும் முடங்கிக் கிடந்த சங்க நூற்செல்வங்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் பயனெய்துமாறு வெளிப்படுத்திய பெருமை டாக்டர் உ.வே.சா. ஐயரவர்களைச் சாரும். அவரையடுத்து அம்முயற்சியில் ஈடுபட்டோருள் குறிப்பிடத்தக்கவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயராவர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சங்க நூல்களுக்கு உரைவரைந்த சான்றோருள் குறிப்பிடத்தக்க ஒருவராகவும் இவர் விளங்கினார். எட்டுத்தொகை எனும் சங்கநூல் தொகுப்பில் இடம்பெறும் நற்றிணைக்கு இவர் முதன்முதலாக உரை வரைந்துள்ளார். இவருரை, ஒவ்வொரு செய்யுட்கும், துறை விளக்கம், பொழிப்புரை, விளக்கம், உள்ளுறை, மெய்ப்பாடு, பயன், இலக்கணக்குறிப்பு ஆகியவற்றைக் கொண்டது. இவருரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் அப்படியே இருமுறை பதிப்பித்த பின்னர்த் *(1952, 1956)* திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பாக *(1962)* பெருமழைப் புலவரைக் கொண்டு வெளியிட்டது. அதில் ஐயரவர்களின் பொழிப்புரை, பதவுரையாகப் பிரித்து அமைக்கப் பட்டதோடு அவரது பணியின் இறுதியில், "(பெருமழைப் புலவர் ஆய்வுரை)" எனும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் பெருமழைப்புலவரின் கருத்துக்ளும், பாடபேதங்களும் சேர்க்கப் பட்டுள்ளன. ஐயரவர்கள் பாட பேதங்களை அறிந்திருந்தும் அவற்றைப் பாடலின் கீழ்க் குறிப்பிடவில்லை என்பதும், பெருமழைப் புலவர் குறிப்பிட்டார் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கன. பின்னர் நற்றிணையைப் பதிப்பித்தோர் மேற்கொண்ட பாடங்களுக்கு, இப்பாடபேதங்கள் பெருமளவில் உதவி புரிந்துள்ளன. பின்னர், உரைவேந்தர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை பதவுரை, விளக்கவுரை முதலியவற்றோடு விரிவான உரைப்பதிப்பினை *(1966)* வெளியிட்டுள்ளார். பின்னர் நூலினை, மூலமாகவும், மூலமும் உரையுமாகவும் பலர் வெளியிட்டுள்ளனர். அவை எல்லாம் 'அந்தாதி பார்த்து அந்தாதியும், கலம்பகம் பார்த்துக் கலம்பகமும்' புலவர்களால் உருவாக்கப்பட்டன என்று பாரதியார் கூறுமாப்போல வெளிவந்தன வேயாகும். அண்மையில் *(1989)*, டாக்டர் உ.வே.சா. ஐயர் நூலக

வெளியீடாக வந்துள்ள 'நற்றிணை மூலமும் உரையும்' எனும் வெளியீடும், அவ்வகையிலமைந்த விலைத் தொண்டுப் பதிப்பாகவே உள்ளதெனலாம்!

தலைப்பிற் குறிப்பிட்டுள்ள ஐயத்தை ஏற்படுத்திய பகுதியைக் கொண்ட நற்றிணை 15ஆம் பாடலில் நாராயணசாமி ஐயரவர்கள் 'ஓய்ய வாங்கக் கை விட்டாங்கு' என்ற பாடத்தையே கொண்டுள்ளார். பெருமழைப்புலவர் பதிப்பில் பாடபேதமாக இடம் பெற்றுள்ள 'பேஎய் வாங்கக் கை விட்டாங்கு' என்னும் பாடத்தையும் பின்னைப் பதிப்பாளர்கள் பாடமாகக் கொண்டு, தாம் கொண்ட பாடத்திற்கேற்பப் பொருள் கூறுவாராயினர். இவ்வகையிலமைந்த பதிப்புக்களில், நாராயணசாமி ஐயர் உரை, ஔவை சு.துரைச்சாமிப் பிள்ளை உரை, எச். வெங்கடராமன் உரை, (உ.வே.சா. நூலகவெளியீடு) ஆகிய மூன்று உரைகளையும் அடிப்படையாக் கொண்டு குழந்தைப்பலி பற்றிய செய்தியினை ஆராயலாம். இம்மூவருள், முன்னவர் 'ஓய்யவாங்க' என்னும் பாடத்தையும், பின்னிருவர் 'பேஎய் வாங்க' என்னும் பாடத்தையும் கொண்டுள்ளனர்.

நெய்தல் திணையில் தோழி கூற்றாக அமைந்த இப்பாடலின் ஆசிரியர் அறிவுடைநம்பியாவார். ஒருவர் பெறுமவற்றுள் மகப்பேற்றின் மிக்க பேறில்லை எனும் கருத்தில் அமைந்த, "படைப்புப் பலபடைத்து ... பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே" என்னும் புறநானூற்றுப் பாடலை (188) ப் பாடியவரும் இப்புலவரேயாவார் என்பது குறிப்பிடத்தக்கது. தலைவியின்பால் இன்பந்துய்த்த தலைமகன் மணந்து கொள்ளாது காலந்தாழ்த்துவது கண்ட தோழி அவன் விரைவில் வந்து மணந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதனை நோக்கமாகக் கொண்டது இப்பாடல். அவன் காலந் தாழ்த்துதலால், ஊரவர் கூறும் அலரால் தலைவி நாணம் இழந்தவளாய் வருந்துகின்றாள்; அதனால் விரைந்து மணந்து கொள்ளல் வேண்டும் என்பது தோழி கூற்றின் கருத்தாகும். 'தலைவியின் நலம் நுகர்ந்த தலைவன், அதனை நினைந்து மணந்து கொள்ள விரையாமல் தாழ்த்துவதால், தலைவனுக்கு உடம்பட்ட நெஞ்சத்தில் வருத்தம் மிக, அதனை ஏற்று, நாணம் விட்டநிலையில் தலைவி உள்ளாள்; இனி இவ்வூர் அலர் எழுவதாக, என்று தலைவனிடம் தோழி கூறுகின்றாள். தலைவி நாணம் விட்டநிலையை விளக்கக் கூறிய உவமையே 'குழந்தைப்பலி' பற்றிய நினைப்பிற்கு அடிப்படையாக உள்ளது. அவ்வுமமை வருமாறு:

"மாசில் கற்பில் மடவோள் குழவி
ஓய்ய வாங்கக் கைவிட்டாங்கு"

(நற் 15:7,8 : பின்னத்தூரார் பாடம்)

இந்த உவமைக்கு முற்குறித்த மூவர் உரையையும், அதன் திறத்தையும் சிந்திப்பாம்.

I. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் (பெருமழைப்புலவர், பொழிப்புரையைப் பதவுரையாக்கிய வண்ணம்)

"மாசு இல் கற்பின் மடவோள் = குற்றமற்ற கற்பினையுடைய மடவாளொருத்தி, குழவி ஓய்ய வாங்கக் கைவிட்டாங்கு தன் குழவியைப் பலி கொடுப்ப வாங்குதலும் அவள் அதனைக் கைவிட்டாற்போல"

ஒய்யுதல் - செலுத்துதல், ஈண்டுப் பலிக்கடன் செலுத்துதல்.

பெருமழைப்புலவர் ஆய்வினா.

"பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு" என்றும் பாடம். இப்பாடமே சிறப்புடையது"

ஐயர் கொண்ட 'ஒய்யவாங்க' என்னும் பாடத்தின்படி இங்குப் பேய்பற்றிய எண்ணம் தோன்றுதற்கே வாய்ப்பில்லை. இருந்தும் "தன் குழந்தையைப் பலி கொடுப்ப வாங்குதலும்" என்னும் பொருளினை 'ஒய்யவாங்க' எனும் தொடருக்கு எழுதுதற்கான காரணம் யாதாயிருக்கலாம் என்று எண்ணுதல் வேண்டும். ஒன்று, அவர் எடுத்துக் கொள்ளாவிட்டாலும், பேஎய் வாங்க எனக்கண்ட பாடபேதம் / பேய்க்குப் பலி கொடுக்க என்னும் எண்ணத்தை உண்டாக்கி இருக்கலாம். சங்ககால மக்களிடத்தே பேய் பற்றிய நம்பிக்கையும் செயற்பாடும் நிலவிவந்தமை இவ்வெண்ணத்தை எழுப்பியிருக்கலாம். இரண்டு, நற்றிணை 74 ஆம் பாடலில், இடம்பெறும், "வல்லவாய்ப்பேஎய் மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய, மன்றம்போழும்" எனும் பகுதி, இப்பாடலில் பேய்நினைப்பெழக் காரணமாகியிருக்கலாம்.

இந்நிலையில் 'ஒய்ய' என்பதற்குச் செலுத்த என்னும் பொருள் கொண்ட ஐயரவர்கள், எதைச் செலுத்த என்பதன் விடையாகப் பலிசெலுத்த பலி கொடுப்ப என்று எழுதலாயினர்.

II. ஔவை சு. துரைசாமிபிள்ளையவர்கள் உரை:

"கற்புடைய மகளொருத்தி ஈன்ற குழவியைப் பேயொன்று போந்து தனக்கெனப் பற்றி எடுக்க அவள் கைவிட்டாற்போல"

மேலுமிவர், "தாய் வாங்குகின்ற மகவைத் த்னக்கெனப் பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே என்று பிறர் கூறுவதைக் காட்டுவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்" எனத் தம் விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

III. எச். வெங்கட்ராமன் (உ.வே.சா. நூலக வெளியீடு) உரை

"குற்றமில்லாத கற்பினையுடைய மட மகளொருத்தி, தன் சிறிய குழந்தையைப் பேய்க்குப் பலிகொடுப்ப எண்ணிப் பின் பாசத்தால் அதனைக் கைவிட்டாற்போல"

பின்னிரண்டு உரைகளும் பேஎய்வாங்க என்னும் பாடத்தைக் கொண்டுள்ளனவேனும், உரை காண்பதில் வேறுபடுகின்றன. பேயொன்று போந்து ஈன்ற குழவியைக் கற்புடையாளிடமிருந்து கவர்ந்தது எனும் கருத்திலமைந்த பிள்ளையவர்களின் உரையும், கற்புடையாளொருத்தி குழந்தையைப் பேய்க்குப் பலிகொடுக்க முதலில் எண்ணிப்பின், மனம் மாறி அவ்வெண்ணத்தைக் கைவிட்டாள் எனும் கருத்திலமைந்த எச். வெங்கடராமன் உரையும் அவ்வவர்தம் கற்பனையில் தோன்றிய ஊகமாகுமேயன்றி, உண்மையுரையாகா. காரணம் இவ்வூகங்களுக்கான பொருளைத் தரும் குறிப்புக்கள் மூலத்தில் இல்லாமையே யாகும். அதனால், பேய்ப் பாடங்கொண்ட இவ்விருவர் உரைகளும், குழந்தைப்பலி பற்றிய செய்திக்குச் சான்றாகாமையை அறியலாம்.

ஐயரவர்கள் கொண்ட ஒய்யவாங்க என்னும் பாடத்திற்குப் பேய் பற்றிய கருத்து பொருந்தாது என்பதை அறியுமுன்னர், அத்தகு கருத்து பண்டைத் தமிழ்த் தாயின்பால் உண்டாகுமா என்பதனை எண்ணிப்பார்ப்பது பயனுடையதாகும். பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற என்பது திருக்குறள். குழந்தைகள் பகைவர்களாலும் விரும்பிக் கொள்ளும் பாங்கினர் என்பதனைச் செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சிச் சிறுவன் என்று பழந்தமிழ் நூல் பகரும். அச்செல்வம் பெற்றோர் இம்மை உலகத்து இசையொடும் விளங்கி மறுமையுலகம் மறுவின்றெய்துப என்பது பழந்தமிழர் கண்டமுடிவு. நற்றிணை 15 ஆம் பாடலை இயற்றிய அறிவுடை நம்பியே புறநானூற்றில் குழந்தைச் செல்வத்தின் சிறப்பையும் பயனையும் காட்டியுள்ளமை முன்னரே குறிப்பிடப் பட்டது. இத்தகு சிந்தனை சிறந்த தமிழினத் தாய்மார்கள் உள்ளத்தில் குழந்தையைப் பலி கொடுக்கும் நினைப்போ, தேவையோ தோன்றியிருக்குமா என்பதனை நினைதல் வேண்டும்.

தன் குழந்தையைப் பலிகொடுத்துப் பெறவேண்டிய கருமம் ஒரு கற்புடைத் தாய்க்கு உளதாகுமா? தம் உயிரையே கொடுக்கும் வீரர் தியாகத்தைத் தமிழிலக்கியங்களிற் காணலாம். தம் கழுத்தினை அறுத்துப் பலி கொடுக்கும் வீரக் காட்சியினைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். பிறிதொரு நலனுக்காகத் தம் குழந்தையைப் பலிகொடுக்க முற்பட்ட தாய்மார் பண்டு இருந்தனர் என்பது பொருந்தாக் கற்பனை யாதலின் பண்டு குழந்தைப் பலி தமிழ் மக்களிடை இருந்தது என்று எண்ணுவது தவறாகும். உரை கண்டவர் உள்ளத்தில் தோன்றிய மயக்கமே குழந்தைப் பலி பண்டு இருந்ததா என்னும் ஐயம் தோன்றுதற்கு இடனாயது.

குறிப்பிட்ட இந்த உவமையின் உண்மையான பொருளைக் காண முற்படுமுன், வாசகர் மனங் கொள்ள வேண்டியது, பண்டிருந்த பேய் பற்றிய நம்பிக்கை, அதனடிப்படையில் எழுந்த மயக்க உணர்வுகள், அவற்றின் பயனாய்த் தோன்றிய பிழைபட்ட உரைகள் ஆகியவற்றை மறந்து விடவேண்டும். ஐயரவர்கள் தேர்ந்துகொண்ட ஒய்யவாங்க என்னும் பாடத்தொடு கூடிய பாடலைமட்டுமே, நம்மறிவு துணையாக ஆராயமுற்பட வேண்டும்.

களவில் ஈடுபட்ட தலைவன் ஒருவன், தலைவியை மணந்து கொள்வதில் காலந்தாழ்த்த, தோழி அவனைக் கண்டு, 'தலைவ, நீ தலைவியின் நலத்தை நுகர்ந்து இப்பொழுது அங்ஙனமின்றிக் காலந்தாழ்த்தலால், ஊரில் உண்டாகிய அலரால் நலனிழந்து நிற்கின்றோம் என்று கூறி விரைவில் வரைந்து கொள்ளுமாறு வருந்தி உரைத்து வலியுறுத்துகின்றாள். தலைவி நாணம் நீங்கி நலியும் நிலைக்கு உவமையாகக் கற்புடைய பெண் குழவியைக் கைவிட்டு வருந்தும் நிலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

ஒய்யவாங்க என்பதில் வாங்க என்பதன் பொருள் வெளிப்படை. ஒய்ய என்பது பொருள் விளக்கம் காணவேண்டிய சொல்லாகும். அது கவர்ந்து வர, செலுத்த, தப்ப எனும் பொருட்களில் சங்கநூல்களில் வழங்கப்பட்டுள்ளது. ஐயர் இச்சொல்லை செலுத்த எனும் பொருளிற் கொண்டமையால், பலி செலுத்த என்று மயங்கி உரைக்க நேர்ந்தது. ஒய்ய என்ற சொல், ஒய் என்னும் சொல்லடியாகப் பிறந்த ஒன்று. ஒய் என்பது வினாவை உணர்த்தும் ஒலிக்குறிப்பாகும். அவ்வகையில் ஒய்ய என்பது விரைய என்று பொருள்படுவதனை, சிலப்பதிகார அரும்பத உரையால் அறியலாம் ஒய்யெனத் தெழித்தாங்கு (சிலப்.15:48) என்னும் தொடருக்கு அடியார்க்கு நல்லார் வேறு பொருள் கூறினாலும் குறிப்புரையாசிரியர் ஒய்யவினாய என்று பொருள் கூறியுள்ளார்.

ஒக்கலிற் சுமக்கும் பருவத்தாய குழந்தையை அதன் தாய் மற்றவர்களிடம் கொடுப்பதும், மற்றவர்களிடமிருந்து வாங்குவதும் என்றும் எங்கும் காணக் கூடிய அன்றாடக் காட்சியாகும். அங்ஙனம் விரைய ஒய்ய வாங்குங்கால் கை நழுவி விழுந்து விடுவதும் எப்போதேனும் நிகழலாம். அந்நிலையில் அத்தாய் துணுக்கமும் துன்பமும் உற்றுக் கவல்வதனைக் காணலாம். அந்த நிலையைத்தான் ஆசிரியர் அறிவுடைநம்பி, இப்பாடலில் தலைவி நாணம் விட்டுத் துன்புற்று நிற்கும் நிலைக்கு உவமையாகக் காட்டுகின்றார். இயல்பாகவும், அருமையாகவும் பொருள் விளங்க நிற்கும் இந்த உவமைக்குப் பேயொடு தொடர்புபடுத்திப் பொருள் காண்பது தேவையற்றதும் பொருந்தாததுமாகும்.

அதனால், ஒய்யவாங்க என்ற பாடங் கொண்டாலும், அன்றிப் பேஎய் வாங்க என்ற பாடங் கொண்டாலும், ஈன்ற தாய் குழந்தைப் பலிக்கு ஒருப்பட்டாள் என்ற எண்ணத்தைப் தோற்றுவிக்கும் எவ்வகைப் பொருளும் ஏற்புடையதாகாது என்பது தெளிவாகிறது.

இப்படி ஓர் தமிழறிஞர்

பேரறிஞர். தி.நா. பிரணதார்த்திஹரன்

சென்னைப் பல்கலைக்கழகம் பிஎச்.டி பட்டம் தொடங்கிய போது அதை முதன்முதலில் பெற்ற பெருமை பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரைச் சாரும். முதல் டாக்டர் பட்டம் தமிழுக்காக! சாஸ்திரியார் தமிழ் இலக்கணக் கோட்பாடுகளின் வரலாறும் சம்ஸ்கிருத இலக்கணக் கோட்பாடுகளோடு அவை கொண்டுள்ள தொடர்பும் என்ற தலைப்பில் ஆய்வேட்டைச் சமர்ப்பித்தார். 1930 இல் டாக்டர் பட்டம் கிடைத்தது.

தமிழ் இலக்கண உலகில் சாஸ்திரியாருக்குத் தனிப்பெருமை உண்டு. தொல்காப்பியத்தை அறிவியல் முறைப்படி ஆய்ந்தும், தொல்காப்பியம் முழுமையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் தமது புலமையை வெளிப்படுத்தினார் சாஸ்திரியார். கணிதவியலில் இளங்கலைப் பட்டம் பெற்ற அவர் சம்ஸ்கிருதத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். ஜெர்மன், லத்தீன் மொழிகளில் சான்றிதழ்ப் பட்டமும் பெற்றுப் பன்மொழிப் புலமையாளராக விளங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அருகே பின்னங்குடி என்ற கிராமத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர், இளமையில் வறுமையால் வாடினார். பெற்றோருடன் கால்நடையாகவே திருச்சி சென்றடைந்தார். படிப்படியாகக் கல்வியில் முன்னேறி, பிஷப்ஹீபர் கல்லூரியில் கீழைநாட்டு மொழிகளின் துணைத் தலைவராகப் பணியேற்றார். 1917 முதல் 1926 வரை அப்பணியில் இருந்தபோதுதான் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தை அவர் கற்பிக்க நேர்ந்தது. அதில் உள்ள பல பிழைகளைச் சுட்டிக்காட்டிய அவர், கால்டுவெல் தொல்காப்பியம் கற்கவில்லை, நன்னூல் மட்டுமே படித்தார் என்பதை ஒரு கட்டுரையில்

விளக்கினார். நன்னூலை ஊன்றிப் படித்தபோது அதில் பல பிழைகளைக் கண்டறிந்து, தனைவிடத் தொன்மையான தமிழிலக்கணம் ஒன்று உள்ளதா என்று தேடினார். அந்நிலையில்தான் தொல்காப்பியம் அவருக்குக் கிடைத்தது. அதை ஆய்வுக் கண்ணோட்டத்தில் அணுகலுற்றார்.

1927 - 1932 கால கட்டத்தில் சென்னையில் தமிழ் சொற்களஞ்சியப் பணியில் (Tamil Lexicon) துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அப்பணியின் ஆசிரியர் வையாபுரிப்பிள்ளை. அவர்கள் பணியே ஆய்வாக அமைந்தது. அந்நிலையில்தான் அவர் தமது ஆய்வேட்டைச் சமர்ப்பித்து டாக்டர் பட்டமும் பெற்றார். அவரோடு மு. ராகவய்யங்கார், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் ஆகியோர் பணியாற்றினர். மூவரும் தினமும் தொல்காப்பியத்தை அதன் உரைகளோடு ஒப்பு நோக்கி ஆய்வு செய்து படித்தனர். அப்பொழுது பிறந்ததே சாஸ்திரியாரின் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு என்ற நூல். அதற்கு முன் அந் நூல் பல கட்டுரைகளாகத் தொடர்ந்து மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட செந்தமிழ்ப் பத்திரிகையில் வந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழி நூல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் குறிப்புரையுடன் போன்ற நூல்களும் பின்னர் வந்தன. தொல்காப்பியம் முழுமையும் ஆங்கிலத்தில் முதன்முதலில் மொழிபெயர்த்த பெருமை சாஸ்திரியாரைச் சாரும். தமிழ்மொழி நூல் எழுதி, அதன்மூலம் தமிழில் முதலாவதாக அத்தகையநூல் எழுதியவர் என்ற பெருமையும் பெற்றார்.

1932 - 42 வரை திருவையாறு அரசர் கல்லூரி முதல்வராகத் திகழ்ந்த அன்னார் தம் வாழ்நாளில் பெரிதும் விரும்பியதும் அவ்வூரையே. காவிரிக்கரையில் அமைந்து அமைதி பரவும் அச்சூழல் அவரைப் பெரிதும் கவர்ந்தது. ஐயாறப்பர் கோவிலருகே தமது சொந்த வீட்டில் அவர் இறுதி வரை வாழ்ந்தார். திருவையாற்றில் பணியாற்றிய போது அவரிடம் தமிழும் சம்ஸ்கிருதமும் பயின்றவர் பலர். குறிப்பிடத்தக்கத் தமிழ் மாணவர்கள் ச. தண்டபாணி தேசிகர், இலக்குவனார், சேதுரகுநாதன் போன்றோர். அந்த 10 ஆண்டுகளில் அவர் எழுதிய தமிழ் நூல்கள் பல. திருக்குறள் - உரை, சங்கநூல்களும் வைதீக மார்க்கமும், தொனிவிளக்கு போன்றவை குறிப்பிடத்தக்கன.

1942 முதல் 5 ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருதத் துறைத் தலைவராக விளங்கினார். அப்பொழுது அவர் எழுதிய முக்கிய நூல்கள் தொல்காப்பியம் சொல்லதிகாரம் ஆங்கில மொழி பெயர்ப்பும் ஆங்கில உரையும், வடமொழி நூல்வாலாறு,

வடமொழி வரலாறு, Historical Tamil Reader, Comparative grammar of the Tamil Language ஆகியவை. அங்கிருந்து பணி ஓய்வு பெற்றார்.

ஓய்வு கால வாழ்க்கையைப் பெரும்பாலும் திருவையாற்றிலேயே கழித்த சாஸ்திரியார், அப்பொழுதும் தம் எழுத்துலகப் பணியிலிருந்து ஓயவில்லை. காஞ்சிப் பெரியவர் உத்தரவுப்படி பாணினி இலக்கணத்தைப் பதஞ்ஜலி உரையுடன் முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கமும் எழுதினார். 14 புத்தக அளவு கொண்ட அந்த விரிவான நூலின் முதல் 6 பகுதிகள் மட்டுமே அச்சிடப் பட்டுள்ளன. அப்பணிக்காக சாகித்ய அகாதமி அவருக்கு 'மகா மகிமோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

தமிழைப் போலவே சம்ஸ்கிருதத்திலும் ஆழமான புலமை படைத்த அவர் நான்கு வேதங்களிலும் தமது நாட்டத்தைச் செலுத்தினார். வேத ஆராய்ச்சி செய்ததோடு பல மாணவர்க்கு வேத உரைகளையும் விளக்கங்களையும் கற்பித்தார் தம்மை நாடி வந்தவருக்கு இலவசமாகவே தமிழையும் சம்ஸ்கிருதத்தையும் கற்பித்தார்.

புறநானூறு முழுவதையும் ஆங்கிலத்தில் ஆராய்ச்சி செய்து, அந்தக் கையெழுத்துப் படியை வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டு 15 நாட்கள் வேறு ஊருக்குச் சென்றிருந்தார். அந்தோ! அவ்வரிய ஆராய்ச்சி முழுவதையும் கறையான் தின்று விட்டது! மிஞ்சி நின்றது 7 பாடல்கள் மட்டுமே. அவ்விழப்பு அவரைப் பெரிதும் பாதித்தது. தமது மூத்த மகன் இறந்தபோது புத்திரசோகத்தில் இருந்த சாஸ்திரியார் "இப்பொழுது எனது மூத்த மகன் இறந்து விட்டான். ஆனால் எனது புறநானூறு ஆராய்ச்சி போய்விட்டதே. அதுவே எனக்குப் பெரிய சோகம்" என்றார். தாம் பெற்ற பிள்ளையை விடத் தமிழை அந்த அளவுக்கு அவர் நேசித்திருக்கிறார்.

அவர் இறுதியாகச் செய்தது திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு. அப்பணி முற்றுப் பெறாமல் நின்றுவிட்டது. தமது 89 வது வயதில் 1978 மே மாதம் திருவையாற்றில் தமது பூவுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார் அவர்.

அவர் புலமையைப் பாராட்டிய அறிஞர்கள், 'கீத், பம்மல் முதலியார், பார்னட், ஸ்டெக்நோ, ப்ளூம்பீல்டு, குப்புசாமி சாஸ்திரி, வையாபுரிப்பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு. ராகவய்யங்கார், இரா. ராகவய்யங்கார், உ.வே.சா. உள்ளூர் பரமேச்சவரன் அய்யர். எல்.வி. ராமசாமி ஐயர், ... வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

38 ஆராய்ச்சி நூல்களைப் படைத்த அவரது சிறந்த பணிகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

i. தொல்காப்பியம் முழுமையும் ஆங்கிலத்தில் முதலாவதாக மொழி பெயர்த்தது.

ii. 'தொனிவிளக்கு' இயற்றியது

iii. முதலாவதாக ஒப்பிலக்கிய, ஒப்பிலக்கண ஆய்வு செய்தது.

iv. தொல்காப்பியம் போலவே பாணினியையும் முழுமையாக ஆய்வு செய்தது

v. திருக்குறளுக்குப் புதுமையான முறையில் உரை கண்டது

vi. வடமொழி இலக்கிய வரலாறு முதன்முதலில் தமிழில் எழுதியது

vii. முதலாவதாகத் தமிழில் மொழிநூல் இயற்றியது

viii. தமிழ் இலக்கண வரலாற்றை முதலாவதாக எழுதியது

அவர் பெற்ற பட்டங்கள் :

"வித்தியாரத்தினம், வித்தியாநிதி, வித்தியா பூஷணம் வாணி திரிவேணி பிரயாக், மகா மகோபாத்தியாயர்"

அவர் மறைந்தாலும் அவரது ஆய்வுப்பணி இன்னும் அவரது பெயரை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ஆய்வே சாஸ்திரியாருக்குத் தவமாக மட்டுமின்றி, துயர்துடைக்கும் மருந்தாகவும் விளங்கியது. நாமும் நூல்கள் ஆய்வினைப் பெறும் தொழிலாகக் கருதாமல், பிரச்சனைகளைத் தீர்க்கும் மருந்தாக உணர்வோம். சாஸ்திரியார் வாழ்க்கை நமக்குணர்த்தும் பாடம் இதுவே.

திருப்புகழ் யாப்பு

பேரறிஞர் இ. அங்கயற்கண்ணி

இன்றைக்கு ஐநூறு ஆண்டுகட்கு முன் நினைக்க முத்தியளிக்கும் திருவருணையிலே தமிழகஞ் செய்த தவப்பயனால் அவதரித்தவர் அருணகிரிநாத சுவாமிகள். அவர் இயற்றிய பலவகை நூல்களுள் 'திருப்புகழ்' இசையுலகில் ஓர் உயர்தனி இடத்தைப் பெற்றுள்ளது.

பொதுவாகத் தமிழிசைப் பாடல்களின் யாப்பமைதியை ஆராயுமுன்னர், இலக்கியங் கண்டதற்கேற்ப இயம்பப்படுவதே இலக்கண நெறி என்பதை நாம் உளங்கொளல் வேண்டும். அவ்வகையில் தொன்மையும் பெருமையும் வாய்ந்த தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணங்கள் யாவும் தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னரும் இருந்த இலக்கியங்களுக்குப் பொருந்துபவை எனலாம். இவ்விலக்கியங்களைச் சான்றோர் செவிவழியாகக் கேட்டும், பயின்றும் அவற்றைப் பின்பற்றித் தம்தம் காலவளர்ச்சிக்கேற்ற மாற்றங்களைப் புகுத்திப் பாடல்களாகவும் காப்பியங்களாகவும் படைத்துள்ளனர். இவை காலந்தோறும் எழுந்த இலக்கண நூல்களிற் பயிலப்படும் இலக்கணங் களை அடியொற்றி அமைந்திருக்கலாம், அமையாமலும் இருக்கலாம். அவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இலக்கியம் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ். இவ்வடிப்படைக் கருத்தை மனங்கொண்டு திருப்புகழை யாப்பு முறையில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யாப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் எட்டாம் இயலான செய்யுளியலில் செய்யுளின் உறுப்புக்களாக 31 உறுப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 26 உறுப்புக்கள் செய்யுளின்

செய்யுளின்கண் இன்றியமையாத உறுப்புக்கள் என்றும், ஏனைய எட்டு உறுப்புக்களும் ஒரோவழி வருவன என்றும் கூறப்பட்டுள்ளது.

அவற்றுள் யாப்பு என்னும் செய்யுளுறுப்பின் விளக்கமாக,

"எழுத்து முதலா வீண்டிய வடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்" (செய்.நூ.74)

என்று தொல்காப்பியர் கூறுகிறார். அதாவது, எழுத்தால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியுமாய் இயன்ற அடியினால், தான் கருதிய அறம், பொருள், இன்பம் முதலான பொருள்களை முதலடியிலிருந்து இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்துதலை யாப்பென்று சொல்லுவர் புலவர். இதன்படி முதலடியிலிருந்து இறுதியடிக்குள் குறித்த பொருள் முடிந்துவிட வேண்டும். அதுவே யாப்பு என்னும் உறுப்பாம் என்றறிய முடிகிறது.

இவ்விளக்கத்தினின்று தமிழிசை உருப்படிகளின் கட்டமைப்பே யாப்பு என்னும் செய்யுறுப்பில் அடங்குகிறது என்று கருத முடிகிறது. "யாப்பெனினும் பாட்டெனினும் தூக்கெனினும் தொடர்பெனினும் செய்யுளெனினும் ஒக்கும்"

எனவே திருப்புகழ் யாப்பினை ஆராய, திருப்புகழ்ப் பாடல்கள் எழுந்த நோக்கம், அப்பாடல்களின் பொருள், அப்பொருளை வெளிப்படுத்த அருணகிரியார் கையாண்ட யாப்பு (கட்டமைப்பு) அதன் உயர்தனிச்சிறப்பு, தொடை நயங்கள் ஆகியவற்றை இவண் ஆராய்வோம்.

திருப்புகழ்ப் பாடல்கள் எழுந்த நோக்கம்

தேவார மூவர் எவ்வாறு சிவபெருமான் உறையும் தலங்ளுக்குச் சென்று இறைவன் புகழைப் பாடி, சமணம் பௌத்தம் போன்ற புறச் சமயத் தாக்குதல்களினின்றும் மக்களை உய்விக்கப் பாடுபட்டனரோ, அவ்வாறே அருணகிரிநாதரும் முருகப் பெருமான் உறையும் தலங்கள் தோறும் சென்று திருப்புகழ் பாடி, தாம் வாழ்ந்த காலமான 15ஆம் நூற்றாண்டில் இருந்த சமுதாயச் சீர்கேடுகளை வன்மையாகக் கண்டித்து மக்களை நெறிபடுத்தப் பாடுபட்டார். தாம் மேற்கொண்ட நோக்கத்திற்காகத் தாம் அறிந்த இலக்கிய மரபின் அடிச்சுவட்டிலும், முருகப் பெருமான் அருளினாலும் புதுமையானதொரு யாப்பு நெறியினைக் கையாண்டார். அதுவே வடமொழியும் தமிழும் கலந்ததொரு சந்தயாப்பு. அருணகிரிநாதர் தாம் சென்ற தலங்களின் பெயர்களுக்கேற்பத் தம் பாடல்களின் சந்தங்களை அமைத்துக் கொண்டமை தமிழிசைப் பாடல்களிற் காணப்படும் புதுமையான

யாப்பு உத்தியாகக் கூறலாம். சான்று: பழமுதிர்சோலை என்னும் தலத்தின் பெயருக்கேற்ப, தனதன தான என்னும் சந்தத்தைக் கையாண்டு "அகரமு மாகி" என்னும் பாடலைப் பாடியமை.

திருப்புகழ் - பொருள்

திருப்புகழ்ப் பாடல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் நன்கு விளக்குவன. முருக பக்தியை அடிப்படையாகக் கொண்டு அனைத்துத் தத்துவங்களையும் ஒருங்கே அடக்கிப் பாடும் பாடல்களாக இவை விளங்குகின்றன. அக்காலத்து நிலவிய சைவ வைணவப் பிணக்குகளை அகற்றி, ஒருமைப்பாடு காண விரும்பியவர் அருணகிரிநாதர் என்பதை அவரது பாடல்களின் வாயிலாகவே அறிய முடிகிறது. சான்றாக, சிவபெருமானின் அருட்குணங்களைக் கூறிச் 'சிவனுடைய மகனே' என்பார். சான்றாக, "ஆனைவரிக் கோடிளநிர்" எனத் தொடங்கும் பாடலின் 5,6 வரிகள் வருமாறு:

தானதனத் தீதிமிலைப் பேரிகைகொட் டாசமலைச்
சாய கடற் சூரைவதைத் திருவோனே
தாளவியற் சோதிநிறக் காலிஎழைக் கோலியெடுத்
தாபரம் வைத் தாடுபவர்க் கொருசேயே

திருமாலின் மகிமையைக் கூறி, 'திருமால் மருகா' என்பர். சான்றாக. "சிவனார் மனங்குளிர" எனத் தொடங்கும் பாடலின்

நவநீத முந் திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமன் சிந்தைமகிழ் - மருகோனே

என்னும் அடிகள் தனியே பிற மூர்த்தியைத் துதித்துப் பாடாத ஒரு (ஏக) தெய்வ வழிபாட்டினை உலகுக்கு உணர்த்திய ஒரு பெருங்குருநாதர் அருணகிரிநாதர்.

திருப்புகழ்ப் பாடல்களின் முதற்பகுதி பெரும்பான்மையான பாடல்களில் உலகியலைப் பற்றியதாக, பொதுவாக மக்கள் மங்கையர் மையலில் உழன்று படும் துன்பங்களைப் பற்றியனவாகவும் அதிலிருந்து விடுபட முருகப் பெருமானின் கருணை வேண்டும் எனவும் மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் உள்ளன. சான்று:

"நகைத்து வுருக்கி விழித்து மிரட்டி
நடித்து விதத்தி லதிமோகம்

என்ற பாடலின் முதற்பகுதி. சில பாடல்கள் மக்கள் வயதுமுதிர்ந்த நிலையில் பலவகை நோய்களால் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றியும் அமைந்துள்ளன. சான்று:

"தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து"

என்ற பாடல். பொதுவாக எல்லாப் பாடல்களிலும் பிற்பகுதியானது முருகப் பெருமானின் சிறப்பியல்புகளையும், அப்பெருமானின் பெருங் கருணைகளையும் எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு திருப்புகழ் வேதங்களிலுள்ள நுண்பொருள்கள், ஆகமக் கருத்துக்கள், புராண வரலாறுகள், இராமாயண பாரத நிகழ்ச்சிகள், மந்திரம், மருத்துவம், நீதி, அறம், இசை, இலயம் ஆகிய அனைத்துக் கூறுகளையும் கொண்டிலங்குகின்றன. இப்பொருள்களுக்கேற்றாற் போல் திருப்புகழ் யாப்பும் (கட்டமைப்பும்) பல திறப்பட்டு உள்ளன. எனவே, திருப்புகழ் ஒரு குறிப்பிட்ட யாப்பை உடையது என்று கூறமுடியாது.

திருப்புகழ் - யாப்பிற்கு மூலம்

அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான்,

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோது"

என்று முதலடி எடுத்துக் கொடுத்துப் பாடும்படி கட்டளையிட்ட போதே, அவர் பாட வேண்டிய யாப்பும் கிடைத்தது. இதன் அடிப்படையில் அருணகிரிநாதர் இந்த யாப்பினைப் பல்வேறு வகைகளில் பெருக்கித் தமிழ்யாப்பு உலகில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தினார் என்று கூறினால் அது மிகையாகாது. எனவே, இதனை அடியொற்றிய இலக்கண அமைதியையும், யாப்பு அமைதியையும் வரையறை செய்ய வேண்டியது நம்முடைய கடனாகும். பழைய இலக்கண நூல்களிற் காணப்படும் இலக்கணக் கூறுகளோடு இதனைப் பொருத்திப் பார்ப்பது பொருந்தாது.

இயற்றமிழ்ச் செய்யுட்குரிய யாப்பு முறையும் இசைத்தமிழ்ச் செய்யுட்குரிய யாப்பு முறையும் சிறுபான்மை ஒத்துப் பெரும்பான்மை வேறுபடும். இயற்றமிழ்ச் செய்யுட்கள் அசைகளால் ஆகிய சீர்களைக் கொண்டு, ஒத்த அளவையான அடிகளைக் கொண்டு அமைவனவாகும். ஆனால், இசைத்தமிழ்ப் பாடல்கள் குறில், நெடில் (லகு, குரு) என்னும் மாத்திரை அளவையும் கொண்டியங்கும். இயற்றமிழில் செய்யுளின் யாப்பறிதற்கு நேர் நிரை என்னும் அசை வகைகளைப் பயன்படுத்துவது போன்று, இசைத்தமிழ்ப் பாடல்களில் தன, தானா போன்ற அசைச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. திருப்புகழ் யாப்பினைப் பொறுத்தமட்டிலும், இவை லகு, குரு என்னும் மாத்திரைஅளவையோடு கூட, வல்லினம், மெல்லினம் ஆகிய

எழுத்துக்களின் ஓசை வேறுபாடுகளையும் கொண்டிலங்குகின்றன. தொல்காப்பியர் இதனை "வண்ணம்" என்று கூறுவர்.

"வண்ணந் தாமே நாலைந் தென்ப" (செய். 521)

வண்ணம் என்பது பாட்டின் கண்ணே நிகழும் ஓசை விகற்பமாகும். இவை உயிரெழுத்துக்களுள் குறில் நெடில் ஆகிய மாத்திரை அளவு பற்றியும், மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து ஆகிய இனம் பற்றியும், செய்யுளுக்குரிய அசை, சீர், அடி, தொடை முதலிய பிற உறுப்புக்கள் பற்றியும் வெவ்வேறு ஓசை நயம் உடையனவாய் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் சுவை பயக்கும் வகையில் அமையும்.

இதனையே பிற்கால நிகண்டுகள் 'சந்தம்' என்னும் பெயரில் குறிப்பிட்டுள்ளன.

"மருவிட வண்ணஞ் சந்தம் வடிவின்பேர் செண்ண மாமே"
(சூடாமணி நிகண்டு. 27 ஆம் செய்யுள்)

'சந்தம்' என்ற தமிழ்ச் சொல், 'அழகு' 'கவியின் வண்ணம்' என்னும் பொருள்களில் குறிக்கப் பெற்றுள்ளது. இயற்றமிழ் யாப்போடு, ஆரிய யாப்பும் கலந்ததொரு நடையிலமைந்த பாடல்களைச் சந்தப்பாக்கள் என்று கூறலாம். எத்தகைய யாப்பு அமைப்புக்களையும் தமிழ் மொழிக்கண் அமைத்துப் பாட இயலும் என்பதைக் காட்டவே இம்முறையில் சில இலக்கியங்களைப் படைத்துக் காட்டினர் நம் முன்னோர். மிறைக்கவி என்னும் சித்திரக்கவி வடமொழியில் கையாளப்பட்டதொரு யாப்பு வகை; அதனை ஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் அமைத்துத் தமிழின் செம்மை மரபினைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வகையில் இசைத்தமிழ் இலக்கியத்தில் சந்தப்பாவிற்கு முதலாசிரியராகத் திருஞான சம்பந்தப் பெருமான் விளங்குகின்றார். இத்தகைய செய்யுட்களால் கவரப்பட்ட அருணகிரிநாதரும்,

"மியதனிற் ப்ரவுவான; புகலியில்லித் தகர் போல்
அமிர்தகவி தொடைபாட; அடிமைதனக்கருள்வாயே"

என்று திருஞானசம்பந்தர் பாடியது போன்று தமக்கும் அமிர்தகவிகள் பாட அருள் புரிய வேண்டும் என்று முருகனை வேண்டிப் பாடுகிறார். அவருடைய வேண்டுதல் நிறைவேறித் தமிழுலகில் ஒரு புதிய யாப்பமைதியுடன் பிற்காலப் புலவர்களுக்கு வழிகாட்டுதலாக அமையக்கூடிய கற்பனை வளத்துடன் ஆயிரக்கணக்கான சந்த அமைப்புக்களை அடக்கிய திருப்புகழ்ப் பாடல்கள் கிடைத்தன. இவற்றை இசையுலகிற்கு வாரி வழங்கிய வள்ளல் பெருந்தகை அருணகிரிநாதரை இசையுலகும் தமிழுலகும் 'சந்தப் பாவல பெருமான்' என்றே போற்றி மகிழ்கின்றன.

திருப்புகழ் யாப்பு - தமிழிசை உலகில் ஒரு புதுமை

திருப்புகழ்ப் பாடல்களின் அமைப்பை ஆராயும்போது கிருதி, கீர்த்தனை, பதம், ஜாவளி போன்ற இசை உருப்படிகளின் அமைப்பைப் போன்றல்லாது, பெரும்பான்மையான பாடல்கள் எட்டுப் பிரிவுகளைக் கொண்டனவாக அமையக் காண்கிறோம். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வரிகள், மூன்று வரிகள் அமைந்திருக்கின்றன. சில திருப்புகழ்ப் பாடல்களில் ஒவ்வொரு பிரிவிலும் 6, 9 மற்றும் 12 வரிகள் அமைந்திருக்கின்றன. எட்டு வரிகள் மற்றும் நான்கு வரிகளை மட்டுமே கொண்ட சிறிய பாடல்களும் உண்டு.

ஒவ்வொரு பாடலின் முதற்பிரிவிலுள்ள சந்த அமைப்பு பாடல் முழுவதிலும் ஒரே சீராக வருவது திருப்புகழின் குறிப்பிடத்தக்க கூறாகும். ஒவ்வொரு பாடலிலும் அதனதன் சந்தக்குழிப்பின் முற்பகுதி அமைப்பிலிருந்து மாறுபட்டு அடிகளின் ஈற்றில் ஒரு தனிச்சீர் அமையப் பெற்றுள்ளது. இசைமரபில் இஃது 'தொங்கல்' என வழங்கப்படுகிறது. திருப்புகழ்ப் பாடல்களின் தனிப்பட்ட சிறப்பிற்கு, 'தொங்கல்' என்னும் இவ்வமைப்பே காரணமாகும்.

திருப்புகழ்ப் பாடல் அமைப்பில் ஒரு குறிப்பிட்ட சந்தம் மூன்றுமுறை ஒரே சீராக மடங்கி வந்து தொங்கலில் முடிவுறுகிறது. இவ்வாறு எட்டுப் பிரிவுகள் அமையக் காண்கிறோம். திருப்புகழ்ப் பாடல்களின் அளவு அடிப்படையில்,

சிறிய அளவுப் பாடல்கள்	4 வரி கொண்டவை
நடுத்தர அளவுப் பாடல்கள்	8 வரி கொண்டவை
பெரிய அளவுப் பாடல்கள்	மூன்றுவரி + தொங்கல் என்னும் அமைப்பு 24 வரி கொண்டவை.
மிகப் பெரிய அளவுப் பாடல்கள்.	

என்றவாறு பிரித்துக் காணலாம். இவ்வகை அமைப்புக் கொண்ட பாடல் வகைகளுக்கு இவரே 'முதலாசிரியர்' எனலாம்.

இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரத்தில் பல்வேறு யாப்பு வகைகளோடு சிலவகைப் பாடல்கள் சந்த அமைப்பிலும் காணப்படுகின்றன. சான்று: 'பொன்னிலங்கு பூங்கொடி' என்னும் கந்துகவரிப் பாடல்.

திருஞானசம்பந்தர் வழியெதுகைகள் அமையப் பாடிய திருவிராகத் திருப்பதிகம் சந்த அமைப்பில் உள்ளது. சான்று:

"சுரருலகு நரர்கள்பயி றரனிதல
முரணழிய வரணமதின்முப்
புரமெரிய விரவுவகை சரவிசை கொள்
சுரமுடைய பரமனிடமாம்.

திருமழிசை ஆழ்வார் அருளிய பாசுரங்கள் சந்தச் சித்திரம் கொண்டு திருச்சந்த விருத்தம் என்றே வழங்கப்பட்டு வருகின்றன.

சான்று :

"ஐந்துமைந்து மைந்துமாகி அல்லவற்று ளாயுமாய்
ஐந்துமூன்று மூன்றுமாகி நின்ற ஆதிதேவனே
ஐந்துமைந்து மைந்துமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஐந்துமைந்து மாய நின்னை யாவர் காணவல்லரே" [8]

பட்டினத்தடிகளின் கோயில் நான்மணிமாலையிலும் ஒட்டக் கூத்தர், வேதாந்த தேசிகர் பாடல்களிலும் சந்த அமைப்பில் பாடல்கள் காணப்படுகின்றன.

இத்தகைய சான்றோர்களின் சந்தப் பாடல்களைப் பின்பற்றி அவற்றை விரிவுபடுத்தி அருணகிரிநாதர் அவ்வமைப்பில் 'தொங்கல்' என்னும் புதிய உருவை அறிமுகப்படுத்தித் தமிழிசைப் பாடல் மரபிலும், தமிழ் இலக்கிய மரபிலும் ஒரு புதிய படைப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது. தமிழ் மொழியன்றி வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகளிலும் தொங்கல் அமைப்புடன் கூடிய சந்தப் பாடல்கள் அருணகிரிநாதர் காலத்திற்கு முன்னர் காணப்படவில்லை என்பது அறிஞர்கள் முடிவு.

திருப்புகழ் யாப்பு இலக்கணம்

இவ்வித அமைப்புடன் கூடிய பாடல் வகைக்கு அறிஞர்கள் பலவாறு இலக்கணம் கூறி வருகின்றனர். நான்கு வகைப் பாவகைகளான வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி முதலிய பிரிவுகளுள் திருப்புகழ் ஆசிரியப் பாவின் உட்பிரிவான ஆசிரிய விருத்த வகையைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆசிரிய விருத்தமாவது, கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவதாம். திருப்புகழின் ஒவ்வொரு அடியிலும் எட்டுச்சீர் அமையப் பெற்றுள்ளது. எனவே, இவை ஆசிரிய விருத்த வகையில் 'எண்சீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்த' வகையைச் சேர்ந்ததாகக் கருதலாம். இது மேலும் ஆய்வுக்குரியது.

பண்டைய இசைத்தமிழ்ப் பாக்களான சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி,

சிறுதேவபாணி, வண்ணம் ஆகியவற்றுள் திருப்புகழ் சமபாத விருத்த வகையைச் சேர்ந்தது என்று டாக்டர் எஸ். இராமநாதன் கருதுகிறார். இஃது ஒருசில பாடல்களுக்கு மட்டுமே குறிப்பாக நெடிலெழுத்துப் பயின்று வருகிற பாடல்களுக்கு மட்டுமே பொருந்தும்.

திருப்புகழ் ஆராய்ச்சியில் தம் வாழ்நாள் முழுவதும் செலவழித்த பேரறிஞர் வ.சு. செங்கல்வராய பிள்ளை திருப்புகழுக்கு யாப்பு இலக்கணம் அமைக்கும் முயற்சியில் இறங்கவில்லை. அப்பாடல்களில் பயின்ற சந்தங்களை ஆராய்ந்து கிடைத்துள்ள 1307 பாடல்களில் 1008 சந்தங்கள் உள்ளன என்று கண்டறிந்தார்.

தமிழறிஞர் வெள்ளைவாரணனாரும் திருப்புகழின் சந்த அழகினைத்தான் கூறினாரேயன்றி யாப்பு வரையறை செய்யவில்லை. பேரறிஞர் வீ. ப. கா. சுந்தரனார், தொல்காப்பிய வண்ணங்களுள் குறுஞ்சீர், நெடுஞ்சீர், சித்திரவண்ணம், குறில்நெடில் வண்ணம், மெல்லிசை, வல்லிசை, இயைபு வண்ணம் ஆகிய ஏழு வண்ணங்களுக்குத் திருப்புகழிலிருந்து எடுத்துக்காட்டுத் தந்துள்ளார்.

இந்நிலையில் 1839 ஆம் ஆண்டு முதல் 1898 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த தவத்திரு தண்டபாணி சுவாமிகள் வண்ணப் பாடல் இலக்கணத்தைப் பின்வரும் சூத்திரம் வாயிலாகக் கூறியுள்ளார்.

"சில்வகைச் சந்தப் புணர்ப்போர் துள்ளலே
பல்வகைத் துள்ளற் புணர்ப்போர் குழிப்பே
குழிப்பொரு மூன்று கூடிய பின்னர்த்
தொங்கற் றாழிசைத் துள்ளலொன் றிசைக்கிற்
கலை யொன்றாமெனக் கழறுவர் புலவோர்
எண்கலைப் புணர்ப்போர் வண்ணப்பாவே"

இதில் காணப்படும் மூன்று குழிப்புக்களுக்குப் பிறகு தொங்கல் என்ற குறிப்பு திருப்புகழ் அமைப்பிற்குப் பொருந்துவதாக உள்ளது. எனவே இதனையே திருப்புகழ் யாப்பிற்குரிய இலக்கணமாகக் கொள்ளலாம்.

திருப்புகழ். யாப்பும் சந்தமும்

திருப்புகழ்ப் பாடல்கள் அவற்றின் யாப்பு அடிப்படையில் ஆராயப்படும்போது பாடலின் அசை சீர் கணக்கிடப்பட்டு அடி வரையறை செய்யப்படுகிறது. இதில் எழுத்துக்களின் எண்ணிக்கை மட்டுமே கணக்கில் கொள்ளப்படும். சந்த அடிப்படையில் ஆராயும் போது மாத்திரை அளவும் ஓசை அளவும் கணக்கிடப்பட்டுத் தாள வரையறை செய்யப்படுகின்றது. சான்றாக ஓரிரண்டு பாடல்களின் யாப்பும் சந்தமும் வேறுபடும் வகையை ஈண்டுக் காணலாம்.

யாப்பு

1. அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
நிரைநேர்நேர் நேர்நிரை நிரைநேர்நேர்
புளிமாங்காய் கூவிளம் புளிமாங்காய்

இயற்றமிழ் யாப்பின்படி ஓரடி 6 சீர் கொண்டதனால் அறுசீர் ஆசிரிய விருத்தம் என்று கொள்ள முடிகிறது.

சந்தம்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
தனதான தந்தனத் தனதானா

இசைத்தமிழ்ச் சந்தப்படி 5 5 6 என்னும் சந்த அமைப்பைக் கொண்டு இரண்டு கண்டம் ஒரு (மேல் கால) திச்ரம் (அதிசித்ராதம மார்க்கத்தில்) என்று அமைகின்றதைக் காணலாம்.

2. கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி
நேர் நிரை நிரை நிரை நேர் நிரை நிரை நிரை
கூ விளம் கரு விளம் கூ விளம் கரு விளம்
நேர் நிரை நிரை நிரை நிரை நேர் நேர்
கூ விளம் கரு விளம் புளி மாங்காய்

இயற்றமிழ் யாப்பின்படி ஓர் அடி ஏழு சீர்கள் கொண்டு எழுசீர் ஆசிரிய விருத்தமாக அமைகின்றது.

சந்தம்

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

இசைத்தமிழ்ச் சந்தப்படி இப்பாடல் । । என்னும் அடிப்படைச் சந்தம் மூன்றுமுறை ஒரே சீராக மடங்கி வந்து தொங்கலில் நிறைவடைகிறது. இவ்வமைப்பு । । என்னும் சதுரச்ர நடையில் அமைந்து ஆதி தாளத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாப்பு

3. நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபாந மோநம
ஞான பண்டிதசாமிந மோநம வெகுகோடி

நேர் நேர்	நேர்நிரை	நேர்நேர்நேர்	நேர் நிரை நிரை நேர் நேர்
தேமா	கூவிளம்	தேமாங்காய்	கூவிளம்
"	"	"	"
"	"	"	" புளிமாங்காய்

இயற்றமிழ் யாப்பின்படி 13 சீர்கள் கொண்ட ஒரு பிரிவைக் கொண்டுள்ளது என்று கூறலாம். எனவே இப்பாடலை 13 சீர்கள் கொண்ட ஆசிரிய விருத்தப் பாடலாகக் கூறலாம்.

சந்தம்

தான	தந்தன	தானான	தானன
3	4	5	4

சந்த அமைப்புப்படி 3 4 5 4 என்னும் பிரிவு கொண்ட அடிப்படைச் சந்தம் மூன்றுமுறை ஒரே சீராக மடங்கித் தொங்கலில் முடிவுறும் அமைப்பாக இப்பாடலைக் கருதலாம். இதன்படி ஒரு வரி 16 மாத்திரைகள் கொண்ட ஆதி தாளத்தில் அமைக்கலாம்.

இவ்வகையில் திருப்புகழ் ஆய்வினை ஒரு புதிய கோணத்தில் நிகழ்த்துவதற்கு வாய்ப்புள்ளது.

திருப்புகழ்ச் சந்தமும் தாளமும்

திருப்புகழில் காணப்பெறும் சந்தங்கள் தாள இலக்கணத்தில் திச்ரம், சதுச்ரம், கண்டம், மிச்ரம் சங்கீரணம் முதலான ஐந்து நடைகளையும், அவற்றின் பிரத்தாரங்களையும் விளக்குவனவாக அமைந்துள்ளன. திருப்புகழ்ச் சந்தங்கள் 11, 13, 15, 17, 19 அட்சர தாள அமைப்புக்களையும் இவற்றின் கலப்புக்களிலும் காணமுடிகிறது. இதைப் பற்றிய விரிவான ஆய்வு **திருப்புகழ்ப் பாடல்களிற் சந்தக்கூறுகள்** என்ற இக்கட்டுரை ஆசிரியரின் நூலிற் காணலாம். மொத்தமாக 1250 பாடல்களில் 857 சந்தங்களும் அவற்றிலிருந்து 178 இலய அமைப்புக்களும் கிடைத்துள்ளன.

திருப்புகழ்த் தொடைச் சிறப்புக்கள்

தமிழிசைப் பாடல்கள் எல்லாவற்றிலும் காணப்படுவது போன்று திருப்புகழிலும் எதுகை, மோனை, இயைபுத் தொடைகள் அவற்றின் வகைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதைத் தவிர யமகம் என்ற அணி காணப்படுகின்றது. (ஒரே சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளில் வருவது) ஒரு பாடலின் சில பாகங்களை நீக்க எஞ்சிய பாகம் பிறிதொரு பாடலாக அமைவதான 'காந்துறை' என்னும் அணியும், அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி போன்ற

இலக்கிய அணிகளும் திருப்புகழுக்கு அணி செய்து அதன் தனித்தன்மையை உயர்த்துகின்றன.

ஆகவே, சந்தயாப்பில் அமைந்த திருப்புகழ்ப் பாடல்கள் 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த புதியதொரு இசைத்தமிழ்ப் பாவகை என்றும் இச்சந்தப் பாவகை ஒவ்வொன்றிற்கும் அதன் போக்கிலேயே இலக்கண வரையறை செய்ய வேண்டுமேயொழிய, இலக்கணத்திற்குப் பொருந்தும் வகையில் சந்தங்களை மாற்றக் கூடாது என்றும் வலியுறுத்தப்படுகிறது. இயற்றமிழ் யாப்பின்படி திருப்புகழ் சந்தப்பாக்கள் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்த வகைக்குப் பொருந்துவனவாகக் கூறலாம்.

தமிழகத் தொல்லியல் கழகம் - கல்வெட்டுப் பயிற்சி முகாம் (மே - சூன்)

பேரறிஞர் க. முத்தையா

உலகிலேயே மிகுதியான வரலாற்று ஆதாரங்கள் உள்ள நாடு என்ற பெருமையை இந்தியாவும், இந்தியாவிலேயே மிகுதியான வரலாற்று ஆதாரங்கள் உள்ள மாநிலம் என்ற பெருமையைத் தமிழகமும் பெற்றுள்ளன. ஆனால், இந்தப் பெருமைக்குரியவர்களாக இந்தியரும், தமிழரும் இருப்பதில்லை. தமிழ்நாட்டு வரலாறு, மொழி வரலாறு, பண்பாட்டு வரலாறு, இன வரலாறு, சமூக வரலாறு ஆகிய வரலாறுகள் கடந்த தலைமுறையைச் சார்ந்த அறிஞர் சிலரால் எழுதப்பட்டுள்ளன. நீலகண்ட சாஸ்திரியார், சதாசிவப் பண்டாரத்தார், மயிலை சீனி வேங்கடசாமி மு. இராகவையங்கார், கே.கே. பிள்ளை, ஆ. வேலுப்பிள்ளை, தெ.பொ.மீ மற்றும் நொபுருகரசிமா, முதலியோர் தமிழக வரலாற்றுக்கான புதிய தடயங்களைப் பதிவு செய்தவராவர். ஆயினும், ஆங்கிலேயர் சமுதாய வரலாற்றை எழுதிய திரவெலியான, போன்றோர் தமிழகத்தில் இனித்தான் பிறக்க வேண்டியுள்ளது. இந்நூற்றாண்டின் எழுபதுகளுக்குப் பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் இன்னும் பரவலாக்கப்படாது முடக்கி வைக்கப் பட்டுள்ளமை இரங்குதற்குரியதே!

அண்மை நூற்றாண்டுகளில் நாகரிக நிலையை எட்டிய மேலை நாட்டினர் சில நூற்றாண்டுப் பழைமையுள்ள தங்களது வரலாற்று ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பேணும் - முயற்சியில் இறங்கியுள்ள நிலையில், தமிழர்களின் புறக்கணிப்பு மனப்பான்மை இருக்கின்ற ஆதாரங்களையும் அழிப்பதாகவே உள்ளது.

இதற்குத் தமிழக அரசின் தொல்லியல் துறை சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 1970 ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சி முகாம் ஒன்றைப் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தி வருகிறது. வரலாற்று ஆதாரங்களை கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், பாறை ஓவியங்கள், பழைய கற்காலக் கருவிகள், பானையோடுகள், செப்புத்திருமேனிகள் ஆகியனவற்றைப் புதிதாகக் கண்டுபிடிக்கவும், முன்னர்க் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வாதாரங்களை அவற்றின் இன்றியமையாமை உணர்ந்து பாதுகாக்கவும், கிடைத்துள்ள இவ்வாதாரங்களை உற்றுநோக்கிப் படித்து ஆய்ந்து புதிய நோக்கில் வரலாறு படைக்கவும் இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சி முகாம் அண்ணாமாவட்டம் திண்டுக்கல் எம்.எஸ்.பி. சோலைநாடார் மேனிலைப் பள்ளியில் மே 13ல் இத்துறையின் இயக்குநர் திரு. நடன.காசிநாதன் தலைமையில் தொடங்கப்பெற்றது. வரலாறு, தமிழ்த் துறைகளைச் சார்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளியாசிரியர்கள் இருபதின்மர் பயிற்சி மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இப்பயிற்சியில் பிராமி, வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் ஆகிய நான்கு வரிவடிவங்கள் கற்பிக்கப்பெற்றன.

தொல்லியல் துறையைச் சார்ந்த நடன. காசிநாதன், கு. தாமோதரன், அப்துல் மசீத்து, நா. மார்க்சியகாந்தி, மா. சந்திரமூர்த்தி, எஸ். வேதாசலம், ச. அரிகரன், பொ. இராசேந்திரன், கோபால், இராசகோபால், சாந்தலிங்கம், குணசேகரன் ஆகியோர் பண்டைத் தமிழரின் எழுத்து வடிவங்கள், கலை, வரலாறு, சிற்ப அமைதிகள், பாறை ஓவியங்கள், அகழாய்வு நெறிமுறைகள் ஆகியன குறித்துச் சிறப்பான முறையில் பயிற்றுவித்தனர். இப்பயிற்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான திரு. எஸ். வேதாசலம் இப்பயிற்சியைத் திட்டமிட்டுச் சீரிய முறையில் நடத்திய பெருமைக்கு உரியவராவார். பயிற்சிக் காலத்தின் ஒவ்வொரு நாள் மாலையிலும் துறைவல்லுநர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் முத்தாய்ப்பாக அமைந்தன.

கல்வெட்டு எழுத்துப் பயிற்சி மிகவும் கடினமாக இருந்த போதிலும், அப்பயிற்சியில் வெற்றி பெற்றபோது பயிற்சியாளர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது? படியெடுக்கப்பட்ட பல்வேறு கல்வெட்டுக்களைப் பயிற்சியாளர்களே தங்கள் சொந்த முயற்சியுடன் படித்ததோடு, கல்வெட்டுக்கள் உள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று மூல ஆதாரங்களை அவர்களே தங்கள் கைகளால் தொட்டுப்

படித்தனர். பயிற்சிக் காலத்தின் போது, புகழூர், யானைமலை, திருப்பரங்குன்றம், சிற்றண்ணவாயில், நாமக்கல், நெகனூர்ப்பட்டி, தஞ்சை ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களைப் பயிற்சியாளர்கள் நேரில் சென்று படிக்கக் கற்றுக்கொண்டனர்.

வரலாற்றிற்கு முற்பட்ட மக்களின், வாழ்வியலை அறிய உதவும் ஆய்வான அகழ்வாய்வும் மிகச்சிறப்பான முறையில் பயிற்றுவிக்கப் பட்டு, இப்பொழுது அகழ்வாய்வு நிகழும் இடங்களான அழகன்குளம், பூம்புகார், மாளிகைமேடு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பல்வேறுவிதமான பானையோடுகள், அவற்றில் எழுதப்பட்டுள்ள வரிவடிவங்கள், பழைய கற்கருவிகள், பழைய கட்டடக்கலை ஆகியனவற்றை நேரில் காணும் வாய்ப்பளிக்கப்பட்டது.

புகாரில் புத்தவிகாரையும், கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் இராசேந்திரனின் அரண்மனையும் மண்ணுக்குள் இருந்து வெளிவந்த வண்ணமிருப்பது அகழ்வாய்வின் பெரும் வெற்றியாகும். இதைப்போலவே கடலுக்குள் உள்ள பழைய புகாரின் கண்டுபிடிப்பும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும்.

தமிழகத்தில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்கள் மறுமுனையில் கலைத்துறையிலும் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மன்னர்கள் தழுவிய மதங்களும், அவற்றின் வெளிப்பாடான கோயில்களும் சமூக மாற்றங்களை அறியப்பெரும் வாய்ப்பளிக்கின்றன. தெய்வங்களின் கைகள் கூடுவதும், கூடிய கைகளில் ஆயுதங்கள் கூடுவதும் அவ்வக்கால அரசியல் சமூக வெளிப்பாடுகளாகும். மன்னர்களின் மதவெறிக்கு உள்ளாகி மூலத் தெய்வங்கள் மறைக்கப்பட்டதும், வடிவமாற்றம் செய்யப்பட்டதும் உண்டு. பல சமண, பௌத்தத் தலங்கள் சைவ வைணவத் தலங்களாக்கப்பட்டுள்ளன. இத்தகைய சமயக் காழ்ப்புகளின் வெளிப்பாட்டை நடப்புக் கோயில்களை உற்றுநோக்கும் போது உணரமுடிகிறது.

பயிற்சியாளர்கள், பயிற்சிக் காலத்தின் இறுதி ஏழு நாட்கள் தமிழகம் முழுவதிலுமுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மதுரை, இராமநாதபுரம், அழகன்குளம், இராமேஸ்வரம், திருவாடனை, பூம்புகார், செஞ்சி, காஞ்சி, சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், மகாபலிபுரம், சென்னை, நாமக்கல், கரூர் ஆகிய இடங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள தொல்லியல் மற்றும் கலை வரலாறு தொடர்பான விளக்கங்களை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.

பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழும் ஊக்கத் தொகையாக ரூபாய் நூறும் வழக்கப்பட்டன. பயிற்சி பெற்ற ஒவ்வொருவரும் முழு மனநிறைவோடு இப்பயிற்சியை இனிதே முடித்தனர். ஒவ்வோராண்டும் அளிக்கப்பெறும் இப்பயிற்சியினால் தொல்லியல் துறைக்குக் கணிசமான வரவுகள் பயிற்சியாளர்களால் வந்த வண்ணம் இருப்பதை அத்துறை சார்ந்த அறிஞர்கள் சுட்டிக்காட்டினர். இவ்வாண்டு கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் தங்களாலான பங்களிப்பைத் தொல்லியல் துறைக்கு வழங்குவார்கள் என்று நம்புவோமாக!

கற்றிலன் ஆயினும் கேட்க. . .

கதிர் தரும் பதில்

முத்தமிழ் மணி, பாண்டி

✍ 'ஐக்கூ' செந்தமிழில் வரலாமா?

'ஹைக்கூ' என்றுதான் வரக்கூடாது; 'ஐக்கூ' என்று வரலாமே! 'ஐக்கூ'வின் இனமரபு வண்ண இழைகளைப் (Chromosome) பழந்தமிழில் காணலாம். 'ஐக்கூ' இறக்குமதிச் சரக்கு அன்று; 'ஐக்கூ' என்ற பெயர்தான் சப்பான் நாட்டிற்குரியது; இந்த நாட்டில் இந்தத் தமிழ் மண்ணில் இது போன்றதொரு யாப்புச் சட்டம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆழங்கால் பட்டுள்ளது. தைனோ பல்லிகள் (dinosaur) போல! இவற்றிற்கு உயிரூட்டலாம் என்ற நம்பிக்கை மலர்கிறது! பழந்தமிழில் அவை கருவாக உயிர்ப்புடன் இன்றும் உள்ளன.

ஐங்குறுநூறு, தாழிசை, சிந்தியல், சிந்தடி, அம்மானை என வரும் கவிதைகளில் மூன்றடி வடிவம் காணலாம்.

கவிதை உலகில் 'ஐக்கூ' ஒரு வளமார் கற்பனைச் சோலையாகும்.

இன்னோரன்ன காரணங்களால் செந்தமிழில் 'ஐக்கூ' கவிதைகளை வரவேற்கிறோம்.

தமிழ்ச் செல்வி, மதுரை

✍ கதிரையா அவர்களே!. . . சில பெண்கள், 'பெண்ணியம்' பேசி, ஆண்களை எதிர்க்கிறார்களே அது பற்றி. . .

ஆண்களை எதிர்ப்பது 'பெண்ணியம்' என்பது தவறான கருத்தாகும். சில பெண்கள் பண்பாட்டுத் தவறுகள் செய்துவிட்டு, அதைப்பற்றிக் கேட்பவரிடம் பெண்ணியம் பேசுவது உண்டு. 'பெண்ணியம்' என்ற இயக்கம், ஆணாதிக்கத்தை எதிர்க்கிறதே அன்றி, ஆண்களை அன்று! என்பதை அறிதல் வேண்டும்.

பெண்கள் வரம்பு மீறிய உரிமைகளை எடுத்துக் கொண்டாலும், பெண்ணுரிமைகளை மதிக்கத் தவறினாலும் சமுதாயத்தில் இருவகைக் கேடுகள் சூழும்; ஒன்று, குடும்ப வாழ்வு குலையும்; பிறிதொன்று, மனித இனம் அழிவுப் பாதையில் செல்லும்.

இதுவரை பெண்களின் கடமைகளை இவையிவை என விதித்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த சமுதாயத்தில், பெண்களுக்கு உரிமைகள் கொடுக்கவோ மரபுகளை மாற்றவோ தயக்கமும் தியக்கமும் கொள்ளும் நிலையைக் காண்கிறோம். பல இடங்களில் பெண்களே தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை; எனவே, இடர்ப்படுகிறார்கள். பெண் இயக்கங்கள் தோன்றிப் பெண்ணுரிமைகளை நிலைநாட்டுவதில் தவறில்லை! ஆனால் மாமியார் மருமகள் சிக்கல்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாக அமைவதைக் காண்கிறோம்.

திருவள்ளுவர்தான் முதன்முதலில் பெண்ணின் பெருமையை உலகறிய உரைத்தவர்.

பெண்களின் உளவியலை அறிந்து, தாய்மைத்துவத்தை உணர்ந்து குடும்பப் பண்பு அழியாமல் பெண்ணியம் பேணி வளர்க்கப்பட வேண்டும்.

இளைய தலைமுறையினர் நெறி பிறழாமல் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்வதற்குப் பெண்ணியத்தின் சிந்தனை இன்றியமையாததாகும்.

சேந்தன் செழியன், முக்கூடல்

✍ **வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் தமிழில் சேர்த்துக் கொள்ளலாமா?**

செழியனாரே! தொல்காப்பியர் காலத்திலேயே இந்தப் புரட்சிக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டார்! ஆனால், சில கட்டுப்பாடுகள் விதித்துள்ளார்.

"வடசொற் கிளவி வடஎழுத்தொரீஇ எழுத்தொடு
புணர்ந்த சொல்லா கும்மே"

- தொல்காப்பியம்

வடசொற்களைத் தமிழில் பயனபடுத்தலாம்! அவ்வாறு பயன்படுத்தும்போது, வட எழுத்துக்களை நீக்கித் தமிழ் எழுத்துக்களைப் பெய்து எழுத வேண்டும் என்றார்.

இந்த விதியினைத் தமிழ் நாவலர்களும் பாவலர்களும் பின்பற்றியுள்ளனர்.

'கல்வியிற் பெரியர் கம்பர்!'; வால்மீகி இராமாயணத்தைச் செந்தமிழில் தந்தவர். ராமனை இராமன் என ஆக்கியவர்; லட்சுமணனை இலக்குவன் என்றெழுதியவர்; ராக்ஷதர்களை அரக்கர் என்று அழைத்தவர் விபிஷ்ணன் வீடணன் ஆனான். கம்ப ராமாயணத்தில் வரும் அனைத்துப் பெயர்களுமே காப்பியர் வழிநின்று மரபு மீறாமல் செந்தமிழின் ஒலிக்கு ஏற்றவாறு கம்பர் மாற்றம் செய்துள்ளார்.

இன்று சிலர் வடமொழிப் பெயர்களைச் சூட்டி 'ஷ்', 'ஸா' என்று எழுதுவதில் மகிழ்கின்றனர். 'க்ரைஸ்டு' தமிழில் கிருத்துவதாகும்; சீனமொழியில் கிலிசெது ஆகும்.

இலக்கியத்தில் கண்டிப்பாகத் தமிழ் ஒலிக் குறிப்பிற்கேற்றவாறு பிறமொழிச் சொற்களை மாற்ற வேண்டும்.

அறிவியல் கலைச்சொற்களில் சில கிரந்த எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக் குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்து கொள்ள அரிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனைகள்

1. தலை முதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ. சி. ஜி.

- ➢ இரத்தவகை
- ➢ சீரம் கிரியேட்டினைன்
- ➢ சர்க்கரை அளவு
- ➢ கொலஸ்ட்ரால் அளவு

கூடுதல் பலன்கள்

- ⇨ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- ⇨ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு.
- ⇨ இலவசமாக இரண்டுமுறை தலை சிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு : பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்று நோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு :

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

MMHRC

Only Private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No. 490/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.

Ph. Call : 42481 (5 lines) 535977 (3 lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்